
# புதிய சபைகளின் வட்டார மேற்பார்வையாளராக தீத்து விளங்கினார்

புதிய மந்தைகளுக்கு புதிய தலைவர்களை நியமிக்க வட்டார மேற்பார்வையாளர்களை (Regional Overseers) ஏற்படுத்தவும்.

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் R1b யை வாசிக்கட்டும்.

**1. உங்கள் இருதயத்தை ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் ஆயத்தப்படுத்துங்கள்.**

ஒரு வட்டார மேற்பார்வையாளர் செய்வதைப் பற்றி பவுல் தீத்துக்கு எழுதிய கடிதத்தை வாசித்து அறிந்து கொள்ளவும்.



- நமக்கு ஏன் வட்டார மேற்பார்வையாளர்கள் தேவை? (மேற்பார்வையாளர்களைப் 'பேராயர்' என்றும் அல்லது வேறு பயனுள்ள பெயராலும் அழைக்கலாம்.)

(பதில்: கிராத்தாலிலே தீத்து செய்தது போல புதிய மேய்ப்பர்களை நியமித்துப் பயிற்றுவிக்க புதிய மந்தைகளுக்கு யாராவது தேவைப்படுகின்றனர். தாங்களே இதை செய்து கொள்வதற்குப் புதிய மந்தைகள் பக்குவம் இல்லாதவர்களாக இருப்பார்கள். தீத்துவுக்கும் தீமோத்தேயுவுக்கும் பவுல் எழுதிய கடிதங்களில் பவுல் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மேய்ப்பர்களின் இயல்புகள் மற்றும் கடமைகளைப் பற்றி எழுதுகிறார். அந்தியோகியாவைப் போன்ற (அப்.13:1-3) மிகவும் வளர்ச்சி அடைந்த சபைகள் தங்கள் தலைவர்களைத் தாங்களே நியமித்துக் கொள்ளலாம்.)

**தீத்து 1:1-3ல் காண்க:**

- கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பொறுத்த வரையில் பவுலின் நிலை என்ன?
- தேவன் பவுலுக்கு ஒப்புவித்தது என்ன?

**தீத்து 1:4-5ல் காண்க.**

- தீத்துவுக்கு பவுலோடு உள்ள உறவு.
- பவுல் ஏன் தீத்துவை கிரேத்தாவில் விட்டுவந்தார்?
- கிரேத்தாவில் உள்ள புதிய சபைகளுக்கு, வட்டார ஒருங்கிணைப்பாளரான தீத்துவுக்கு பவுல் கூறியது என்ன?

**2 கொரி 2:12-13ல் காண்க:** தனது 'ஆவிக்குரிய மகனாக' தீத்து கூட இருப்பதை பவுல் எவ்வளவு பயனுள்ளதாகக் கருதினார்.

**2 கொரி 7:5-7 ல் காண்க.**

- தீத்துவைப் பற்றி மற்றவர்கள் நினைத்தது என்ன?
- தம்மோடு தீத்து இருப்பதனால் பவுல் எதை சகித்துக் கொள்ள மனதாய் இருந்தார்?
- தீத்து 1:6-9ல் காண்க. மேய்ப்பருக்கு (மூப்பருக்கு) தேவைப்படுவன எவை?
- ஒரு மூப்பரின் குடும்பம் எப்படி இருக்க வேண்டும்?
- ஒரு மூப்பரின் குணநலன்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?

**தீத்து 1:10-16 ல் காண்க.** இந்த மூப்பர்கள் திருத்த வேண்டியதாக இருக்கப்போகும் பிரச்சினைகள்.

பவுல், சில விஷயங்கள் குறைவுள்ளதாக விடப்பட்டுள்ளன என்று தீத்துவிடம் கூறினார் (தீத்து 1:5)

**தீத்து 2:1-10ல் காண்க:** நேர்ப்படுத்தப்பட வேண்டியவைகளாக இருக்கும் சில விஷயங்கள் என்ன?

- வயதான ஆண்கள் என்ன செய்யவேண்டும் என்று தீத்து அறிவுரை கூற வேண்டி இருந்தது?
- வயதான பெண்கள்?
- இளைஞர்கள்?
- வேலைக்காரர்கள்?
- ('சுதந்திர மனிதர்கள்' என்று அழைக்கப்பட்ட எஜமானர்களுக்கு கொத்தடிமைகள் (bond slaves) சேவை செய்ய வேண்டும் என்று ரோமச் சட்டம் கூறியது)

**தீத்து 2:15ல் காண்க.** இந்த விஷயங்களை ஒரு வட்டார ஒருங்கிணைப்பாளர் எவ்வளவு அதிகாரத்தோடு வலியுறுத்த வேண்டும்.

**பிலிப்பியர் 2:19-30ல் காண்க.** பிலிப்பு வட்டாரத்தில் சேவை செய்த இரு ஒருங்கிணைப்பாளர்களின் பெயர்கள்.

- இந்த இரண்டு ஒருங்கிணைப்பாளர்களும் எப்படிப்பட்ட மனிதர்கள்?
- பவுலோடு சேர்ந்து சபைகளுக்கு அவர்கள் என்ன செய்தார்கள்?
- பவுல் அவர்கள் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்?

**2. பிற சபைகளில் இருந்து வட்டார ஒருங்கிணைப்பு பற்றி உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

சரியான விஷயங்களைச் செய்யும் சரியான நபர்களை நியமிக்க தேவ ஞானத்தைப் பெறுவதற்கு இணைந்து **ஜெபிக்கவும்.**

- உங்கள் சபைகளை யார் மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதில் கருத்தொற்றுமை கொள்க. அது அவற்றை ஸ்தாபித்த ஓர் அப்போஸ்தலராகவோ, அல்லது அவற்றின் மேல் உண்மையிலேயே அக்கறை உள்ள ஒருவராகவோ இருக்கலாம். புதிய ஏற்பாட்டில் இத்தகைய அப்போஸ்தலர்கள் புதிய சபைகளை ஸ்தாபிக்க இன்னொரு வட்டாரத்தில் இருந்து வந்தவர்களாக இருந்தனர்.
- ஒருங்கிணைப்பாளரால் புதிய மேய்ப்பர்களை போதித்து உருவாக்க முடியுமா? இல்லை என்றால் தீத்து, தீமோத்தேயு போன்றவர்களைப் பவுல் நியமித்தது போல வேறு ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்க வேண்டும்.

**என்ன செய்ய வேண்டும் என்பதைப் புதிய** ஒருங்கிணைப்பாளர்களுக்கு எடுத்துக் காட்டவும்.

- புதிய சபைகளை சந்தித்து, ஊக்கப்படுத்தி, எழுதவும் செய்யலாம் - பவுலைப் போல.
- செல்லும் போது உதவியாளர்களையும் கூட்டிச் செல்லலாம். மற்றவர்களுக்கு அறிவுரை கூறும்போது இவர்களும் அதைக் கேட்டு கற்றுக் கொள்வார்கள் (2 தீமோ.2:2).
- புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட நடவடிக்கைகளை தங்கள் சபைகள் செய்யத் தொடங்கும் வரை மேய்ப்பர்கள் புதிது புதிதாய் மூப்பர்களை போதித்து உருவாக்கும்படி ஏற்பாடுகள் செய்யவும்.

**இந்த இயக்கம் சிறியதாக இருக்கும் போது** 'அப்போஸ்தலரே' அதன் வட்டார ஒருங்கிணைப்பாளராக சேவை புரிவார். (அப்.14:21-23). அந்த 'அப்போஸ்தலர்' சேவை புரிய வேறு இடத்துக்கு செல்ல ஆயத்தம் ஆகும் போது, அந்தப் பகுதியில் அவர் தனது உதவியாளரை தேவப் பணிகளை ஒருங்கிணைக்க அதிகாரப்பூர்வமாக நியமிக்க வேண்டும். (பிலி. 2:19-24)

- புதிய மேய்ப்பர்களுக்குப் போதிக்கும் எல்லா மேய்ப்பர்களிடமும் பவுல்-தீமோத்தேயு பாடங்களோ அல்லது வேறு தகுதியான பாடங்களோ இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- சபைகள் தங்கள் பணிகளை ஒருங்கிணைக்க உதவி செய்யவும்.
- உண்மையாக உழைக்கும் உதவியாளர்களை பொது மன்றத்தில் உறுதிசெய்ய திட்டமிடவும்.
- பொதுமன்றத்தில் அவர்கள் மேல் கைகளை வைத்து அதிகாரப்படுத்தவும் (2 தீமோ.1:6, 1 தீமோ.4:14).
- அவர்களை மதிக்கும்படி சபைகளுக்கு அறிவுறுத்துங்கள் (1 கொரி. 16:10-11: பிலி.2:29).
- பாவம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு அதிகாரம் அளிப்பதைத் தவிர்த்து விடுங்கள் (1 தீமோ.5:22).

வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு கீழ்வருபவைகளைத் தெளிவுறுத்த ஓர் ‘அப்போஸ்தலரை’ **ஏற்பாடு செய்யவும்.**

- ஒரு புதிய மேய்ப்பரிடம் அவரது சபையின் தேவைகளைத் தெரிந்துகொள்ள எவ்வாறு பேசுவது?
- அவரது மந்தையின் உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், செய்ய ஆரம்பிக்க வேண்டியது என்ன என்று எவ்வாறு அறிந்து கொள்வது?
- தீத்து 1:6-9ல் கூறப்பட்டுள்ள மூப்பரின் தகுதிகளை அடைய ஆரம்பித்துக்ள மனிதர்களை எவ்வாறு கண்டறிவது?

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.

பிலிப்பியர் 2:19-30 ல் இருந்து தீமோத்தேயுவையும், எப்பாப்பிரோதீத்துவையும் பற்றி **கூறுக.** உண்மையும் உபயோகமும் உள்ள தாழ்மையான உதவி ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டு எவ்வாறு கர்த்தராகிய இயேசு தமது ஊழியர்களை ஆசீர்வதிக்கிறார் என்பதை **விளக்குக.**

**விளக்கவும்.**

- பகுதி 1 & 2 லிருந்து, வட்டார ஒருங்கிணைப்பாளர்களின் தேவையும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும்,
- பகுதில் 2 ல் இருந்து அப்போஸ்தலர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை,

**சிறுவர்கள்** தங்கள் தயாரித்தவற்றைப் பெரியவர்களுக்கு வழங்கட்டும்.

தாங்கள் அறிந்த ஓர் ஒருங்கிணைப்பாளரின் ஆசீர்வாதம், நற்பணிகள் மற்றும் நல்லியல்புகள் பற்றி விசுவாசிகள் **சாட்சி கூறலாம்.**

எண்ணாகமம் 9:1-5 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும். தங்கள் கதவுகளில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்பட்ட வீடுகளில் உள்ள தலைச்சாண்களை தேவன் எவ்விதம் காப்பாற்றினார் என்பதையும், எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து தங்களை எவ்வாறு விடுவித்தார் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள, வனாந்தரத்திலே தேவ மக்கள் பஸ்காவின் ஆட்டுக்குட்டியைப் புசித்தனர் என்பதை விளக்குக.

ஜெபிக்கவும், திட்டங்களை உறுதிப்படுத்தவும், ஒருவரை ஒருவா ஊக்கப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைக்கவும்.

மாற்கு 10:42-45 ஐ வாசித்து 45ஆம் வசனத்தை இணைந்து **மனப்பாடம் செய்க.**

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net